பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | கார்த்திகை 08 | சனிக்கிழமை | 26.11.2022 | கதிர் 273

## வேம்படி மகளிரில் 65 பேருக்கு 9 ‘ஏ’

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைக் குத் தோற்றிய 249 மாணவிகளில் 65 பேர் 9 பாடங்களிலும், 61 பேர் கள் 8 பாடங்களிலும் ‘ஏ’ சித்தி பெற்று வடக்கு மாகாணத்தில் சாதனை புரிந்துள்ளனர். 8☞

## தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் இன்று தரணியெங்கும் தமிழர்கள் கொண்டாட்டம்


தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனின் 68 ஆவது பிறந்த நாள் நிகழ்வுகள் இன்று தரணியெங்கும் கொண்டாடப்படுகின்றது.

தமிழ் மக்களின் உரிமைக்காக மூன்று தசாப் தங்களுக்கும் மேலாகப் போராடிய தமிழீழ விடுத லைப்புலிகள் அமைப்பின் தலைவரான வே.பிரபாகரன், தமிழீழத் தேசியத் தலைவராக தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தவராவார்.

தலைவர் பிரபாகரனின் பிறந்தநாளையொட்டி 2☞







# வீரமறவர்களை நாளை நினைவேந்த துயிலும் இல்லங்கள் தயார் நிலையில்



## பட்டொளி வீசிப் பறக்கின்றன சிவப்பு, மஞ்சள் கொடிகள்











தமிழினத்தின் விடுதலைக்காகத் தங்களை ஆகுதியாக்கிய வீரமறவர்களை நினைவேந்தும் மாவீரர் நாள் நிகழ்வுகள் 8☞



## மாவீரர் நிகழ்வை நடத்தாதீர் என்று பொலிஸ் எழுத்து மூலம் அறிவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை, திருக்கோவில் பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் நாளை நடக்கவிருக்கின்ற மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வை 8☞

## மட்டு., அம்பாறை மாவட்டங்களில் 5 இடங்களில் மாவீரர் நிகழ்வுகள்



### முன்னாள் எம்.பி. அரியம் தகவல்

(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் 5 இடங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நாளை நடைபெறும் என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் 8☞

## வடக்கில் 551 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்று சாதனை

(வவுனியா நிருபர்)

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட் சைப் பெறுபேற்றில் வடக்கு மாகாணத்தில் 551 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அதன்படி யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 193 மாணவர் களும், தென்மராட்சி கல்வி வலயத்தில் 36 2☞

## நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கு ஆளுநருக்கு அதிகாரம் கிடையாது

### அவைத் தலைவர் சி.வி.கே. சீற்றம் ஜனாதிபதியிடம் முறையிட முடிவு

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

வடக்கு மாகாண ஆளுநரால் நியதிச் சட்டங் கள் ஆக்கப்பட்டிருக்கின்றன என வர்த்தமானி யில் அறிவிக்கப்பட்டிருக்கின்றமை பெரும் அத்துமீறல். இது சட்டவிரோதமான– முறையற்ற நடவடிக்கை. இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பொது நிர்வாக, உள்ளூராட்சி, 2☞




### நாங்கள் மீண்டும்

## ஆயுதம் தூக்கினால் நீங்கள் தப்புவீர்களா?

### தமிழ் அரசியல் தலைமைகளிடம் இன்பராசா இப்படிக் கேள்விக்கணை

(வவுனியா நிருபர்)

நாளைக்கே நாம் ஆயு தம் தூக்கவேண்டி வந்தால் நீங்கள் தப்புவீர்களா? – என்று புனர்வாழ்வளிக்கப் பட்ட தமிழ் விடுதலைப்புலி கள் கட்சியின் தலைவர் க. இன்பராசா கேள்வி எழுப் பினார். 2☞




## 9 ‘ஏ’ பெற்ற கிரிக்கெட் வீராங்கனை



2021 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் 2☞

## ஒருபுறம் பேச்சுக்கு அழைப்பு; மறுபுறம் காணி ஆக்கிரமிப்பு

### கஜேந்திரகுமார் எம்.பி. ஆவேசம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஜனாதிபதி ஒருபுறம் பேச்சுக்கு அழைப்பு விடுத்து விட்டு, மறுபுறம் தமிழர்களின் காணி களை இராணுவத்தினர் ஆக்கிரமிக்க இட மளிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இது றைக்கப்பட முடியாத உண்மை. 8☞



## நியதிச் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபைகள் அமைச்சரிடம் கடிதம் ஊடாக முறையிடவுள்ளோம்.

– இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். கல்வியங்காட்டில் உள்ள தமது அலுவலகத்தில் இன்று காலை தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

வடக்கு மாகாண ஆளுநர் நியதிச் சட்டங்கள் என்று சொல்லப்படுகின்ற இரண்டை வர்த்தமானியில் பிரசுரித்துள்ளார். வாழ்வாதாரம் தொடர்பான விடயம் மற்றும் சுற்றுலா தொடர்பான விடயம் என இரண்டு நியதிச் சட்டங்களை அறிவித்துள்ளார்.

இந்த இரண்டுமே ஆளுநருடைய அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டவை. சட்டவிரோதமானவை. முறையற்றவை. மாகாண சபைகள் கட்டளைச் சட்டத்துக்கு முரணானவை.

மாகாண சபை சட்டத்தின் படி ஆளுநர் தனது நிறைவேற்று அதிகாரங்களை ஜனாதிபதியின் பணிப்புரையின் பெயரால் செயற்படுத்த முடியும் என்றுள்ளது. எனவே, ஆளுநருக்கு சட்டவாக்க அதிகாரம் எந்த இடத்திலும் கொடுக்கப்படவில்லை. ஜனாதிபதிக்கும் அது இல்லை. எந்த இடத்திலும் ஆளுநர் சட்டம் இயற்றலாம் என்று குறிப்பிடப்படவில்லை.

இவர் துணிவாக – எதேச்சாதிகாரமாக இரண்டு நியதிச் சட்டங்களைப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

அதிகாரப் பகிர்வு மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கக் கூடிய அதிகாரங்களையும் ஜனாதிபதியின் பிரதிநிதியாக ஆளுநர் பறித்தெடுக்கின்றார். இது பாரதூரமான ஒரு விடயம். அரசியல் ரீதியாக கண்டிக்கப்பட வேண்டிய விடயம். அரசியல் ரீதியில் பாதிப்பான விவகாரம். எங்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களையும் பறிக்கக் கூடிய ஒரு செயற்பாடாகக் காணப்படுகின்றது.

இந்த விடயத்தில் விழிப்பாக நாங்கள் இருக்க வேண்டும். ஆளுநரின் எதேச்சதிகாரமான அதிகாரத்தைக் கேட்பதற்கு யாரும் இல்லை என்ற நிலையில் செயற்படுகின்றார். எனவே, இந்த விடயத்தை உடனடியாக ஜனாதிபதி மற்றும் உள்ளூராட்சி அமைச்சருக்குத் தெரியப்படுத்துவதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம் –என்றார்.

## 9 ‘ஏ’ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் இலங்கை மகளிர் தேசிய கிரிக்கெட் அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விஷ்மி குணரத்ன (வயது 17) 9 ஏ சித்திகளுடன் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளார்.

கம்பஹா ரத்னாவலி பெண்கள் கல்லூரி மாணவியான இவர், இலங்கை 19 வயதுக்குட்பட்ட இலங்கை கிரிக்கெட் மகளிர் அணியின் தலைவராகவும் உள்ளார்.

நாடளாவிய ரீதியில் மே 23 முதல் ஜூன் 01 வரை 3 ஆயிரத்து 845 மையங்களில் நடைபெற்ற பரீட்சைக்கு 5 இலட்சத்து 18 ஆயிரத்து 245 பரீட்சார்த்திகள் முகம்கொடுத்தனர். அவர்களில் 4 இலட்சத்து 7 ஆயிரத்து 785 பாடசாலை மாணவர்கள் மற்றும் ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 460 தனியார் விண்ணப்பதாரர்கள் பங்குபற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆயுதம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா ஊடக அமையத்தில் இன்று காலை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

மாவீரர்கள் வேறு அமைப்புக்களில் இருந்து வந்தவர்கள் அல்லர். எங்களில் ஒருவரே மாவீரர். யுத்தத்தில் இறந்தவர்கள் மாவீரர்களாகவும் தப்பி இன்று உயிருடன் இருப்பவர்கள் முன்னாள் போராளிகளாகவும் உள்ளனர்.

ஆனால், இன்று நாம் வேதனைப்படுபவர்களாக மாறியுள்ளோம். எங்கள் தோல்களில் தூக்கி சுமந்து மாவீரர் துயிலும் இல்லங்களில் விதைக்கப்பட்டவர்களுக்கும் காடுகளில் பல சந்தர்ப்பங்களில் மாவீரர்களாகியவர்களுக்கும் அகவணக்கம் செலுத்த முடியாதவர்களாக உள்ளோம்.

இன்று சில அரசியல்வாதிகள் எங்கள் மாவீரர்களுக்கான நிகழ்வுகளை எங்களைச் செய்ய விடாமல் தாங்கள் சென்று அதில் அக்கறை செலுத்துவது வேதனையளிக்கின்றது.

எங்கள் மாவீரர்களுக்கு நாங்கள் விளக்கேற்றும்போதே அவர்களின் ஆத்மா சாந்தியடையும்.. எங்களோடு இருந்த போராளிகளை நாங்களே ஒருகணம் சிந்திப்போம். அப்போதுதான் அவர்களின் ஆத்மா சாந்தியடையும். அவ்வாறான நிலையில் நாங்கள் அஞ்சலி செலுத்தச் சென்றால் அனைத்து அரசியல்வாதிகளும் வந்து எங்களை நாய்கள் போன்று கலைக்கின்றீர்கள். எங்களை அரசியல்வாதி என்று கலைத்து நீங்கள் எல்லாம் தேசியவாதிகள் என்று கூறி உள்ளே நிற்கின்றீர்கள் – என்றார்.

## தலைவர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கிலும், நாட்டின் இதர பகுதிகளிலும் பொலிஸாரினதும் இராணுவத்தினரினதும் கண்காணிப்புதீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும், தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வுகள் நாட்டின் பல பாகங்களிலும் இன்று பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் கொண்டாடப்படுகின்றன.

யாழ்., வடமராட்சி, வல்வெட்டித்துறையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் பூர்வீக வீட்டின் முன்பாக  டக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தால் பிறந்தநாள் நிகழ்வு கொண்டாடப்பட்டது. அதன்போது பொதுமக்களுக்கு எள்ளுருண்டைகள் மற்றும் இனிப்புக் கள் வழங்கி வைக்கப்பட்டன. யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திலும் மாணவர்களால் தலைவர் பிரபாகரனுக்கு பிறந்தநாள் கேக் வெட்டப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள பிரத்தியேக இடமொன்றில் ஒன்றுகூடிய மாணவர்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் உருவப்படத்தை வைத்து கேக் வெட்டி பிறந்தநாளைக் கொண்டாடினர். அத்துடன் நல்லூர் ஆலய முன்ற லில் யாசகர் ஒருவர் ஆலய வழிப்பாட் டுக்கு வருகை தந்தவர்களுக்குத் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளையொட்டி இனிப்புக்களை வழங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வுகள் புலம்பெயர் தேசமெங்கும் இன்று கொண்டாடுகின்றது.

## வடக்கில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களும், வடமராட்சி கல்வி வலயத்தில் 56 மாணவர்களும், வலிகாமம் கல்வி வலயத்தில் 53 மாணவர்களும், தீவகக் கல்வி வலயத்தில் ஒரு மாணவரும் உள்ளடங்களாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 339 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

வவுனியா தெற்கு வலயத்தில் 56 மாணவர்களும், வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 12 மாணவர்களுமாக 68 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர். இதன்படி வவுனியா மாவட்டம் வடக்கில் இரண்டாம் நிலையைப் பெற்றுள்ளது. முல்லைத்தீவு கல்வி வலயத்தில 47 மாணவர்களும், துணுக்காய் கல்வி வலயத்தில் 9 மாணவர்களுமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 56 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 49 மாணவர்களும், மன்னார் மாவட்டத்தில் 39 மாணவர்களும் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.



காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தமிழர் தரப்பின் நிலைப்பாடு

இருப்பதைத் தக்க வைத்துக் கொண்டுதான் எதிர்காலம் குறித்து பேச வேண்டும். அதுதான் சரியான முறைமையாக இருக்கும்.

ஒருபுறம் அடித்துப் பிடித்துச் சூறையாடிக் கொண்டிருக்கும் தரப்புடன், அதனை அனுமதித்துக் கொண்டு, மறுபுறத்தில் சமரசம் செய்ய முடியாது. பேச இயலாது.

தேசியப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் பங்குபற்றுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகள் நேற்று ஒன்று கூடி மேற்கொண்ட தீர்மானத்தின் பின்புலத்தில் இந்த அம்சம்தான் பிரதானமாக அமைந்துள்ளது.

ஒருபுறம் 13 ஆம் திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டு, மறுபுறம் தமிழர் தாயகத்துக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வை வலியுறுத்துவது ஒன்றுக்கொன்று முரண்பாடான நிலை அல்லவா? அனைத்துத் தமிழ் கட்சிகளையும் இணைப்பதற்காக இப்படி முரண்பட்ட கருத்துகளை ஒன்று சேர்த்த ஓர் இணக்கப்பாட்டுக் கோரிக்கைக்குத் தமிழ் கட்சிகள் வரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதா? – என்ற கேள்விகள் சில தரப்புக்களால் எழுப்பப்படுகின்றன.

தமிழ்த் தேசியக் கட்சிகள் மேற்படி தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் பூர்வாங்க இணக்கம் காணப்பட்ட அம்சங்கள் என்று குறிப்பிட்ட மூன்று விடயங்களையும் ஒரு சீர்பட நோக்குவோர் மனதில் இத்தகைய கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததே.

ஆனால் அந்த மூன்று அம்சங்களில் முதல் இரண்டும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் உடனடி, அவசரப் பிரச்சனைகள் சம்பந்தப்பட்டவை. அதனால் முதல் இரண்டையும் உடனடியாகச் செய்ய வலியுறுத்திய தமிழ் கட்சிகள், மூன்றாவது குறித்து – தீர்வு குறித்து – பேசலாம் என்ற சாரபட அந்த அறிவிப்பை விடுத்திருக்கின்றன. இந்தப் பின்புலத்தில் அந்த மூன்று அம்ச திட்டங்களை நோக்கினால் அதன் தாற்பரியம் புரியும்.

1. நில அபகரிப்பு நிறுத்தப்பட்டு, அபகரிக்கப்பட்ட நிலங்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

2. அதிகாரப் பகிர்வு சம்பந்தமான அரசமைப்பு மற்றும் சட்டங்களை அமுல்படுத்தி மாகாண சபை தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட்ட வேண்டும்.

3. உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த வட, கிழக்குப் பிரதேசத்தில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான புது அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இந்த ஒழுங்குமுறை நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைமுறைப் படுத்துவதை நாம் வரவேற்கிறோம்.

– இதுதான் அந்த மூன்று அம்சங்கள்.

முதல் இரண்டும் பேச்சுக்கான முன் நிபந்தனைகளாக முன்வைக்கப்படாவிட்டாலும் இந்த சமரச முயற்சி முன்நகர்வதற்கான களச் சூழலை ஏற்படுவதற்கு அவை அவசியமானவை.

தமிழ்க்கட்சிகளின் இந்த நியாயமான கோரிக்கை தொடர்பில் அரசுத் தலைமை காட்டக்கூடிய பிரதிபலிப்பை வைத்து, இந்த முயற்சியின் முன்நகர்வு குறித்து எதிர்வு கூற முடியும்.

# இலங்கையை வங்குரோத்து நிலைக்குத் தள்ளி வெளிநாடுகளிடம் மண்டியிடச்செய்வதற்கான சதி!

## இடம்பெற்றது என்கிறார் அஜித் கப்ரால்



இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைக்கு என்னை மாத்திரம் குற்றம்சாட்ட முடியாது என மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பாகத் தனது சமீபத்தைய வெளியீடொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு எவரையாவது குற்றம்சாட்டவேண்டும் என்றால் என்னை மாத்திரம் குற்றம்சாட்ட முடியாது. முன்னைய நிர்வாகம் – முன்னைய அமைச்சரவை – முன்னைய நிதியமைச்சர் – மத்திய வங்கியின் நாணயசபை ஆகியவற்றை குற்றம்சாட்டவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் நிதி தொடர்பான தீர்மானங்கள் அனைத்தும் கூட்டாக எடுக்கப்பட்டன என அஜித் கப்ரால் தெரிவித்துள்ளார்.

எந்த முடிவையும் நான் தனியாக எடுக்கவில்லை, தன்னிச்சையாக எடுக்கவில்லை, இவை கூட்டாக எடுக்கப்பட்டன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டது எனத் தெரிவித்து கடன்களை செலுத்துவதை இடைநிறுத்துவது என்ற ஏப்ரல் 12 தீர்மானத்தை சுதந்திரத்தின் பின்னர் இலங்கைக்கு இழைக்கப்பட்ட பெரும் துரோகம் என அவர் வர்ணித்துள்ளார்.

இலங்கை நிதிநெருக்கடியில் சிக்குண்டிருந்த வேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பல தடவை இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சதித்திட்டத்தின் பின்னால் பல முகவர்கள் செயற்பட்டனர். இலங்கையை எப்படியாவது வங்குரோத்து நிலைக்கு தள்ளி வெளிநாடுகளிடம் மண்டியிடச்செய்வதே அவர்களின் நோக்கம் எனத் தெரிவித்துள்ள மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர், நான் ஆளுநராக இருந்தவேளை என்னைப் பயன்படுத்தி நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளுவதற்கு இந்த வெளிநாட்டு சக்திகளும் அவர்களின் கைப்பொம்மைகளும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டன. ஆனால் நான் அவர்களின் வலைக்குள் விழாததன் காரண மாக என்மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இலங்கையின் பொருளாதார படுகொலை பற்றிய இதுவரை வெளிவராத தகவல்களை வழங்குவதாக தெரிவித்துள்ள அவர், இந்தப் படுகொலையை மேற்கொண்ட உண்மையான நபர்களை அடையாளம் காண்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# சீனாவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட டீசல் ஏற்றிய கப்பல் இன்று நாடு வந்தடையும்

## சீனத் தூதரகம் அறிவிப்பு

சீனாவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட டீசல் சரக்குகளை ஏற்றிய 'சூப்பர் ஈஸ்டன்' என்ற கப்பல் சிங்கப்பூரில் இருந்து நாட்டுக்கு வரவுள்ளதாக சீன தூதரகம் அறிவித்துள்ளது.

அந்த கப்பலில் இருந்து 10.6 மில்லியன் லீற்றர் (9,000 மெற்றிக் தொன்) டீசல் இலங்கைக்கு கொண்டு வரப்படுவதாக சீனத் தூதரகம் தனது ருவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளது.

இந்த கப்பல் இன்று (சனிக்கிழமை) கொழும்பை வந்தடையவுள்ளதாகவும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்காக சீனாவால் இந்த டீசல் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

# மன்னாரில் மாவீரர் தினத்தை நினைவுகூருவதற்கு எதிராக விதிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவு மீளப்பெறப்பட்டது

மன்னாரில் மாவீரர் தினத்தை நினைவு கூறுவதற்கு எதிராக விதிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு மீளப்பெறப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை அடம்பன் பொலிஸாரால் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் இடைக்கால தடை உத்தரவு பெறப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பாக சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் கூறுகையில் –

'மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆட்காட்டிவெளி துயிலும் இல்ல திருத்தப்பணிகள் இடம்பெற்று வந்த நிலையில் மாவீரர் தினத்தை வரும் தினங்களில் மன்னார் பிரதேச மக்கள் அனுஷ்டிக்க இருந்தனர் எனவும் இவ்வாறு பிரதேச மக்கள் இந்த மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கும் போது மீண்டும் ஓர் இனக்கலவரம் இனங்களுக்கிடையிலான முரண்பாடு இடம் பெறலாம் என்றும் எனவே அதற்குத் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறு அடம்பன் பொலிஸாரால் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குற்றவியல் நடைமுறை சட்டக்கோவை இன் பிரிவு 106 பிரகாரம் குறித்த வழக்கை ஏற்ற மன்னார் நீதிவான், மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு 24 ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை மன்னார் நகர சபையின் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் உட்பட 6 நபர்களின் பெயரை குறிப்பிட்டு இடைக்கால தடை ஒன்றை வழங்கியிருந்தார்.

இந்த நிலையில் நேற்று (வெள்ளிக்கிழமை) மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் அடம்பன் பொலிஸ் பொறுப்பதிகாரி இணைந்து நகர்த்தல் பத்திரம் ஊடாக மேற்படி வழக்கை மீண்டும் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து வழக்கை மீளப் பெறுவதாக தெரிவித்த நிலையில் மாவீரர் தினத்தை நினைவு கூறு வதற் காக வழங்கப்பட்ட தற்காலிக தடை உத்தரவு தளர்த்தப்பட்டுள்ளது என கூறினார்.

அதே நேரம் வழக்கின் இறுதி அறிக்கைக்காக இவ்வழக்கு இம்மாதம் 30 ஆம் திகதி தவணை இடப்பட்டுள்ளது.

# இரு உள்ளூர் துப்பாக்கிகளுடன் ஒருவர் கிளிநொச்சியில் கைது!

கிளிநொச்சி சோலை நகர் பகுதியில் உள்ளூர் துப்பாக்கிகள் இரண்டுடன் ஒருவர் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி புதுமுறிப்பு பிரதேசத்துக்குட்பட்ட சோலை நகர்ப்பகுதியில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் இரண்டு வைத்திருந்த சந்தேகத்தில் ஒருவர் கிளிநொச்சி வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து இரண்டு உள்ளூர் துப்பாக்கிகளும் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பான விசரணைகளை முன்னெடுத்து வரும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், கைதான சந்தேக நபரையும் சான்றுப் பொருள்களையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளனர் எனத் தெரிவித்தனர்.

# அடுக்குமாடிக் குடியிருப்பில் தீ! சீனாவில் பத்துப் பேர் மரணம்!!









சீனாவின் வடமேற்கில் உள்ள சின்ஜியாங் மாகாணத்தின் உரும்கி நகரில் 21 மாடிகளை கொண்ட அடுக்குமாடி குடியிருப்பில் நேற்றுமுன்தினம் பயங்கர தீவிபத்து ஏற்பட்டுள்ளது. இந்தத் தீவிபத்தில் 10பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தீ விபத்து குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புப் படையினர் 3 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். இந்தத் தீ விபத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். மேலும் 9 பேர் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டனர். அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு உள்ளனர். தீ விபத்தில் காயமடைந்தவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், விபத்து குறித்து உயர்மட்ட விசாரணை நடத்து வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## அசாதாரண சூழல்களில் ரோபாக்களை பயன்படுத்திக் கட்டுப்படுத்தும் முயற்சி

### பிரான்சிஸ்கோ மாகாணத்தில் சர்ச்சை







வாஷிங்டன், நவ.26

அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ மாகாண பொலிஸார், ரோபோக்களை அசாதாரண சூழலில் பயன்படுத்துவதற்கு திட்டமிட்டு வருகின்றனர். அமெரிக்காவில் அண்மைக் காலமாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், அங்கு அப்பாவி பொதுமக்களும், பள்ளிக் குழந்தைகளும் கொல்லப்படும் சம்பவங்கள் தொடர்கதையாகி வருகின்ற நிலையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு பொது இடங்களில் மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் செயல்படுபவர்களைச் சமாளிப்பதற்கு ஆயுதம் ஏந்திய பிரத்தியேகப் பொலிஸ் படை பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பிரிவில் ரோபோக்களை பயன்படுத்தித் தீவிரவாத தாக்குதல், கலவரம் போன்ற அசாதாரண சூழல்களில் மனிதர்களைக் கொல்ல அவற்றுக்கு அனுமதி வழங்க வேண்டும் என சான் பிரான்சிஸ்கோ பொலிஸ் விண்ணப்பித்துள்ளது. மேலும் மரண தண்டனைகளை நிறைவேற்றும் பணிகளிலும் ரோபோக்களை ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால் இந்த விண்ணபத்திற்கு சான் பிரான்சிஸ்கோ நகர நிர்வாகக் குழு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. ரோபோக்களை மனிதர்களுக்கு எதிராக பயன்படுத்த கொள்கை விதிமுறைகளில் இடமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் வரைவுகளில் சில திருத்தங்களை மேற்கொண்டு சான் பிரான்சிஸ்கோ பொலிஸ் மீண்டும் விண்ணப்பித்திருக்கும் நிலையில், இதற்கு அனுமதி அளிக்கலாமா, வேண்டாமா என்பது குறித்து வரும் 29ஆம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஏற்கனவே சான் பிரான்சிஸ்கோ காவல் துறையில் 17 ரோபோக்கள் உள்ள நிலையில், வெடிகுண்டுகளை தேடுவது உள்ளிட்ட சவாலான பணிகளுக்கு அவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் சான் பிரான்சிஸ்கோ பொலிஸின் இந்த முயற்சிக்குப் பல்வேறு மனித உரிமை அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைக்குள் துப்பாக்கிச் சூடு; பிரேசிலில் மூன்று பேர் உயிரிழப்பு




பிரேசிலியா, நவ.26

பிரேசில் நாட்டின் எஸ்பிரிடோ சண்டோ மாகாணம் விக்டோரியா நகரம் ஆர்க்ரூஸ் பகுதியில் அருகருகே அரசு மற்றும் தனியார் பாடசாலைகள் இரண்டு உள்ளன. இந்நிலையில், வழக்கம் போல நேற்று காலை பள்ளிகள் செயல்பட ஆரம்பித்த போது காலை 10 மணி அளவில் பள்ளிக்குள் துப்பாக்கியுடன் வந்த நபர் அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தியமையுடன், அருகில் இருந்த மற்றொரு பள்ளிக்கூடம் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளார். இராணுவ உடை மற்றும் முகமூடி அணிந்து வந்த மர்ம நபர் ஒருவரே இரண்டு பள்ளிகளிலும் திடீரென புகுந்து தாக்குதல் நடத்தி உள்ளார்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர். மேலும், 11 பேர் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர்.

மேலும், துப்பாக்கிச்சூடு நடத்திய நபர் அங்கிருந்து தப்பியோடி விட்டார். துப்பாக்கிச்சூடு நடத்தியவன் 17 வயதான சிறுவன் என தகவல் வெளியாகியுள்ளது. தப்பியோடிய சிறுவனை பிடிக்க பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மேலும், இந்த இரட்டை தாக்குதலுக்கு பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா இரங்கல் தெரிவித்து உள்ளமையுடன், உயிரிழந்தவர்களின் நினைவாக 3 நாள்கள் துக்கம் கடைப்பிடிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

## இந்தோனேசிய நிலநடுக்க உயிரிழப்பு எண்ணிக்கை 310ஐத் தாண்டியது; இன்னும் அதிகரிக்கவும் வாய்ப்பு

ஜகார்த்தா, நவ.26

இந்தோனேசிய ஏற்பட்ட நிலநடுக்க பகுதியில் தொடர்ந்து மீட்பு பணிகள் நடைபெற்று வரும் நிலையில், நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 310 ஆக உயர்ந்து உள்ளதுடன், இன்னும் 24 பேரை காணவில்லை என அந்நாட்டு தேசிய பேரிடர் மீட்புக் கழகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேஜர் ஜெனரல் சுஹர்யான்தோ செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் – நிலநடுக்கத்திற்கு பலியானவர்களில் 3 இல் ஒரு பங்கினர் குழந்தைகள். 2,043 பேர் காயமடைந்து உள்ளனர்.

61,800 பேர் வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர் – எனக் கூறியுள்ளார்.

அத்துடன், 56,320 வீடுகள் சேதமடைந்தன. அவற்றில் 3இல் ஒரு பங்கு வீடுகள் அதிக அளவில் மோசமடைந்துள்ளன. இதுதவிர, 31 பள்ளிகள், 124 வழிபாட்டு தலங்கள் மற்றும் 3 சுகாதார வசதி மையங்களும் நிலநடுக்கத்தில் சேதமடைந்து உள்ளன. நிலநடுக்க பகுதிகளை கடந்த 2 நாள்களுக்கு முன்பு இந்தோனேசிய அதிபர் ஜோகோ விடோடோ நேரில் சென்று பார்வையிட்டார்.

வீடுகளை இழந்த உரிமையாளர்களுக்கு இழப்பீட்டு தொகையும் அறிவிக்கப்பட்டு உள்ளது. மேலும், நிலநடுக்கம் பாதிப்பை எதிர்கொள்ளும்படியான வீடுகள் மீண்டும் கட்டப்பட வேண்டும் என்று விடோடோ தெரிவித்துள்ளார். இந்நிலையில், பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகின்றமை .குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# சத்தீஷ்காரில் படையினரின் தாக்குதலில் பெண் உட்பட 3 மாவோயிஸ்டுகள் சாவு!




பிஜாப்பூர்,நவ.26

சத்தீஷ்காரில் மாவோயிஸ்டுகள் மற்றும் நக்சலைட்டுகளின் ஆதிக்கம் பரவலாக பல இடங்களில் காணப்படுகின்ற நிலையில், அவர்கள் அவ்வப்போது வனபகுதியில் இருந்து ஊருக்குள் புகுந்து, அரசியல்வாதிகள், பாதுகாப்பு படை உள்ளிட்டோர் மீது தாக்குதல்களும் நடத்தி வருகின்றனர். இதில், பொதுமக்களும் சில சமயங்களில் பாதிக்கப்படுகின்றனர். இந்த நிலையில், சத்தீஷ்காரின் பிஜாப்பூர் மாவட்டத் தில் பொம்ராவவனப்பகுதியில், மீர்தூர்பொலிஸ் நிலை யத்திற்கு உட்பட்ட பகுதியில் மாவோயிஸ்டுகள் பதுங்கி உள்ளனர் என பாதுகாப்புப் படையினருக்கு உளவு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து, அந்த பகுதியை சுற்றி வளைத்த வீரர்கள் மற்றும் பொலிஸார் அதிரடி 'என்கௌண்ட்டரில்' ஈடுபட்டனர். இதில் மத்திய ரிசர்வ் படையினருடன் இணைந்து, சிறப்பு அதிரடி படை மற்றும் மாவட்ட ரிசர்வ் படையினரும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். இந்த சம்பவத்தில், 30 முதல் 40 மாவோ யிஸ்டுகள் ஒன்றாக கூடியிருந்தனர் என்று கூறப்படுகிறது. இந்த மோதலில், 3 மாவோயிஸ்டுகள் வரைச் சுட்டு கொல்லப்பட்டுள்ளனர்.

அவர்களில் பெண் மாவோயிஸ்டு ஒருவரும் அடங்குகிறார் எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் ஏனையோரைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் தொடர்ந்து தேடுதல் பணி நடைபெற்று வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயங்கரவாதம் முழு மனித குலத்திற்கும் அச்சுறுத்தல் என்கின்றார் ஜெய்சங்கர்




புதுடெல்லி, நவ.26

இந்தியாவில் மராட்டிய மாநிலம் மும்பையில் 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி அடுத்தடுத்து பயங்கரவாத தாக்குதல்கள் நடைபெற்றன. பாகிஸ்தானில் செயல்பட்டு வரும் லஷ்கர்–இ–தொய்பா பயங்கரவாத அமைப்பை சேர்ந்த பயங்கரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தியிருந்தனர். இந்தப் பயங்கரவாத தாக்குதலில் வெளிநாட்டை சேர்ந்தவர்கள் உள்பட 166 பேர் உயிரிழந்தனர்.

தாக்குதல் நடத்திய 9 பயங்கரவாதிகள் பாதுகாப்பு படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டனர்.

இந்த நிலையில், மும்பை பயங்கரவாத தாக்குதலின் நினைவு தினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு, மத்திய வெளிவிவகார அமைச்சர்

டாக்டர்எஸ். ஜெய்சங்கர் தெரிவிக்கையில்–மும்பை பயங்கரவாத தாக்குதல் நினைவு தினத்தில் அதில் பாதிக்கப்பட்டவர்களை நினைவ. கூர்வதில் உலக நாடுகள் இந்தியாவுடன் இன்று இணைந்துள்ளன. பயங்கரவாதம் மனித குலத்திற்கு

அச்சுறுத்தலாக உள்ளது. இந்தப் பயங்கரவாத செயல்களைத் திட்டமிட்டவர்கள் மற்றும் தாக்குதலை மேற்பார்வை செய்தவர்கள் நீதியின் முன் கொண்டு வரப்பட வேண்டும். பயங்கரவாதத்திற்கு இலக்காகி பாதிக்கப்பட்ட உலகம் முழுவதும் உள்ள ஒவ்வொரு நபருக்கும் கைம்மாறாக இதனை செய்ய வேண்டும். –என அவர் கூறியுள்ளார்.

## துபாயில் கொள்ளையைத் தடுத்த இந்தியருக்கு கிடைத்த கௌரவம்

துபாய், நவ.26

துபாயில் உள்ள தெய்ரா மாவட்டத்தில் கடந்த மாதம் இரண்டு நபர்கள் பைகளில் 42 லட்சத்து 50 ஆயிரம் திர்ஹாம் பணத்தை எடுத்துச் சென்றுள்ளனர். அவர்களை பின்தொடர்ந்து சென்ற நபர் ஒருவர், அவர்களிடம் இருந்து ஒரு பையை பறித்துக் கொண்டு ஓட்டம் பிடித்துள்ளார். அப்போது உதவி கோரி அந்த நபர்கள் சத்தம் போட்டுள்ளனர்.



இதனைக் கேட்டு அந்த பகுதியில் இருந்த கேஷர் காரா சவாடா காரு கேலா, என்ற 32 வயதான இந்தியர் ஒருவர், பணப்பையுடன் தப்பிச் சென்ற கொள்ளையனை மடக்கிப் பிடித்துள்ளார். பின்னர் அந்த இடத்திற்கு பொலிஸார் விரைந்து வந்து!கொள்ளையனை கைது செய்தனர். இந்தச் சம்பவத்தின் மூலம் 2.7 மில்லியன்வ்திர்ஹாம்(இந்திய மதிப்பில் சுமார் 6.6 கோடி ரூபா) பணம் கொள்ளை போவதில் இருந்து தடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கொள்ளை முயற்சியை தடுத்த இந்தியரான கேஷர் காராவை பொலிஸார் பாராட்டியமையுடன் மேலும் அவரை கௌரவிக்கும் விதமாக துபாய் பொலிசார், கேஷர் காரா பணிபுரியும் இடத்திற்கு நேரில் சென்று அவருக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பதக்கத்தை வழங்கி கௌரவித்தனர். தனது நண்பர்கள் மற்றும் சக பணியாளர்கள் முன்பு துபாய் பொலிஸார் தன்னை கௌரவித்தமை மறக்க முடியாத அனுபவம் என கேஷர் காரா நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

## மாத முடிவுக்குள் சபரிமலை தரிசனத்துக்கு சுமார் பத்து லட்சம் பக்தர்கள் கூடுவார்கள்

சபரிமலை, நவ.26

சபரிமலை அய்யப்பன் கோவிலில் மண்டல, மகர விளக்கு பூஜைக்காக கடந்த 16ஆம் திகதி மாலை 5 மணிக்கு நடைதிறக்கப்பட்டது. கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக கடந்த 2 ஆண்டுகள் சபரிமலைக்கு பக்தர்களின் வருகை மிகவும் குறைவாக இருந்தது. தற்போது மண்டலபூஜைக்காக கட்டுப்பாடுகள் முழுமையாக தளர்த்தப்பட்டு உள்ளன. அதே சமயத்தில் ஒன்லைன் முன்பதிவு முறையில் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள். மேலும் நேரடியாக வரும் பக்தர்களின் வசதியை கருத்தில் கொண்டு உடனடி தரிசனத்திற்கான முன்பதிவு செய்யும் வசதிகளும் செய்யப்பட்டு உள்ளன.

நடை திறக்கப்பட்ட நாள் முதல் நேற்றுமுன்தினம் வரை 3 லட்சத்து 84 ஆயிரத்து 106 பக்தர்கள் ஒன்லைன் மூலம் முன்பதிவு செய்து தரிசனம் செய்துள்ளனர். இவை தவிர உடனடிதரிசனமுன்பதிவுமூலமாகவும் ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகிறார்கள். இந்தநிலையில் வருகிற 30ஆம் தஜகதி வரை சபரிமலை தரிசனத்திற்கு 8 லட்சத்து 79 ஆயிரம் பக்தர்கள் ஒன்லைன் மூலம் முன்பதிவு செய்துள்ளனர் என திருவிதாங்கூர் தேவஸ்தானம் தெரிவித்துள்ளது. உடனடி முன்பதிவையும் சேர்த்தால் நவம்பர் மாத இறுதிக்குள் 10 லட்சம் பக்தர்கள் சபரிமலையில் தரிசனம் மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு நாளைக்கு அதிகபட்சமாக ஒரு லட்சத்து 20ஆயிரம் பக்தர்கள் ஒன்லைன் மூலம் முன்பதிவு செய்ய முடியும். இதனால் வருகிற நாள்களில் மேலும் ஆயிரக்கணக்கானோர் முன்பதிவை மேற்கொள்வார்கள் என கூறப்படுகிறது. இதற்கிடையே தொற்றுநோய் பரவுவதை தடுக்க சபரிமலைக்கு வரும் அய்யப்ப பக்தர்கள் முக கவசம் அணிந்து வர வேண்டும் என்று தேவஸ்தானம் அறிவுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# அம்பாறையில் நாளை மாவீரர் தினத்துக்கு கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லம் தயார்!

## உணர்வெழுச்சியுடன் நினைவேந்தல் நிகழ்வுக்கு ஏற்பாடு





(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டம் கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வு நடைபெற இருக்கின்றது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் மாவீரர் பணிக்குழு மன்றம் முன்னெடுத்து இருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தின் சகல பாகங்களில் இருந்து போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதேபோல் அங்கு இரவுபோசனமும் வழங்கப்படுவதற்கும் தென்னம்பிள்ளை வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

போக்குவரத்து ஏற்பாடுகளுக்காக மக்கள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என குழுவினர் தெரிவித்தனர்:-

- கல்முனை தொடக்கம் கஞ்சிகுடியாறு :- துசா – 077 9045689
- அக்கரைப்பற்று/ கண்ணகிகிபுரம் தொடக்கம் கஞ்சிகுடியாறு :- யோகேஸ்வரன் 077 166 5092
- திருக்கோயில்/தம்பிலுவில் தொடக்கம் கஞ்சிகுடியாறு :-,கவிதாஸ் 075 3811681
- விநாயகபுரம் தொடக்கம் கஞ்சிகுடியாறு :- கவிதாஸ் 0753811681
- பொத்துவில் தொடக்கம் கஞ்சிகுடியாறு :- துசன் 0753437960

# வெருகலில் 26 மாணவருக்கு சைக்கிள்கள் வழங்கிவைப்பு!







வெருகல் பிரதேச பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் 26 பேருக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெருகல் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு சைக்கிள்களை மாணவர்களுக்கு வழங்கி வைத்தார். இப்பிரதேசத்தில் சில கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் தூரப்பிரதேசங்களில் இருந்து பாடசாலைக்கு வருகை தருகின்றமையுடன் போக்குவரத்துப் பிரச்சினைகளையும் முகங்கொடுத்திருந்தனர்.

இதனை நிவர்த்திக்கும் வகையில் வேல்ட் விசன் நிறுவனம் இந்தச் சைக்கிள்களை வழங்க அனு சரனை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வெருகல் பிரதேச செயலாளர் எம். ஏ.அனஸ், திணைக்கள தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# பொத்துவிலுக்குக் கல்வி வலயம் தனியாக உருவாவதற்கு இணக்கம்

(கே.எ.ஹமீட்)

கிழக்கு மாகாணத்தில் புதிய கல்வி வலயங்களை உருவாக்குவது தொடர்பான கூட்டம், கல்வி அமைச்சில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது, பொத்துவிலுக்கான கல்வி வலயத்தை தருவதற்கான பல வாக்குறுதிகள் வழங்கப்பட்ட நிலையில், பொத்துவிலின் கல்வி மேம்பாட்டில் கல்வி வலயத்தின் உருவாக்கத்தின் மூலம் எட்டப்படும் நன்மைகள் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் முாரப், விரிவாக விவரங்களுடன் முன்வைத்தார். கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த பலரும் அதனை ஏற்றுக் கொண்டனர்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கல்வி அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலும் பொத்துவிலுக்கான தனியான கவ்வி வலயத் தேவை குறித்து விவரமாக நாடாளுமன்ற உறுப்பினர் முன்வைத்த நிலையில், அது தொடர்பாக பரிசீலிக்கப்படும் என்ற உறுதிமொழி அன்று வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நேற்றைய கூட்டத்திலும் பொத்துவிலுக்கான தனியான கல்வி வலயத்தின் தேவை வலியுறுத்தப்பட்டது.

இதன் பயனாக, புதிய கல்வி வலயங்களை உருவாக்குவது தொடர்பான மாவட்ட மட்டத்திலான விசேட கூட்டம் ஜனவரி மாதத்தில் இடம்பெறும் எனவும், அந்தக் கூட்டத்தின் போது, பொத்துவில் கல்வி வலயம் எந்தெந்த கொத்தணிகளை உள்ளடக்கிய வகையில் உருவாக்கப்பட வேண்டும் என்பது உறுதி செய்யப்பட்டு, பெப்ரவரி மாதத்தில் புதிய கல்வி வலயமாக பொத்துவில் கல்வி வலயம் உருவாக்கப்படும் என கல்வி அமைச்சரினால் உறுதியளிக்கப்பட்டது.

# ரெலிகொம் நிறுவன ஊழியர் கல்முனையில் ஆர்ப்பாட்டம்



கல்முனை ரெலி கொம் நிறுவன ஊழியர்கள் நேற்று வெள்ளிக்கிழமை அகில இலங்கை ரீதியில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கல்முனை ரெலிகொம் நிலையத்திற்கு முன் பதாகைகளுடன் ஆர்ப்பாட்டம் செய்வதை காணலாம். (படம்: காரைதீவு குறூப் நிருபர் சகா).

# வியட்நாமில் உயிரிழந்தவரின் சடலத்தை இலங்கைக்கு கொண்டுவருவதற்கு 30 லட்சம் ரூபா வரையில் தேவை!



வியட்நாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 303 இலங்கையர்களில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த தமிழ் அகதியொருவர் தற்கொலைக்கு முயற்சித்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவத்தில் யாழ்ப்பாணம் – சாவகச்சேரி, கல்வயலை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான சுந்தரலிங்கம் கிரிதரன் (வயது 37) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில் உயிரிழந்த கிரிதரனின் மனைவி கருத்து தெரிவிக்கும் போது–

அங்கிருந்து கணவரின் உடலை இங்கே கொண்டு வர 30 லட்சம் ரூபா வரையில் தேவைப்படும் என தெரிவித்து என்னிடம் கையொப்பம் கேட்டனர்.

அந்த 30 லட்சம் இருக்குமாயின் நான் ஏன் என்னுடைய கணவரை கடல் கடந்து அனுப்ப வேண்டும். நான்கு பிள்ளைகளையும் வளர்க்க வேண்டும், கடன் பிரச்சினைகளும் இருக்கின்றன அவற்றிலிருந்து மீள வேண்டும் எனத் தெரிவித்தே கடல் கடந்து என்னுடைய கணவர் சென்றார். இப்படி நடக்குமென நான் எதிர்பார்க்கவில்லை.

கடைசியாக நான் அரசாங்கத்திடம் விடுக்கும் கோரிக்கை, அப்பா இல்லை என்பதை எனது குழந்தைகளுக்கு காட்டுவதற்காக அவரது உடலை எம்மிடம் கொண்டு வந்து சேர்த்து விடுங்கள் என கதறியழுத வண்ணம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் படகு பிடிப்பட்ட பின்னர் தான் அடுத்த நாள் தொலைபேசியில் அழைத்து கூறினார், எந்தவொரு பிரச்சினையும் இல்லை, யோசிக்க வேண்டாம், நான் அழைப்பை ஏற்படுத்திய தொலைபேசி எண்ணுக்கு திருப்பி அழைக்க வேண்டாம் என்று.

இதை தான் கடைசியாக கூறினார். அதன் பின்னர் என்னைத் தொடர்பு கொள்ளவில்லை. கடைசியாக அவர் இறந்து விட்டார் என்ற செய்தியை தான் நான் அறிந்தேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். கொக்குவில் கேணியடியில் திருட்டு!

யாழ்.கொக்குவில் – கேணியடி பகுதியில் உள்ள வீடொன்றின் ஜன்னல் வழியாக தொலைபேசி மற்றும் பணம் ஆகியன திருடிச் செல்லப்பட்டுள்ளன.

நேற்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை இடம்பெற்ற இந்த சம்பவம் தொடாபாக மேலும் தெரியவருவதாவது –

குடியிருப்புக்கள் அதிகமான கேணியடி பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்த திருடன் வீட்டு ஜன்னலை திறந்து உள்ளே இருந்த பெறுமதியான தொலைபேசி மற்றும் ஒரு தொகை பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளான்.

சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

இதேவேளை கேணியடி பகுதியில் தொடர்ச்சியாக திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுவரும் நிலையில் பொலிஸாருக்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனச் சுட்டிக்காட்டியுள்ள பாதிக்கப்பட்டவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னரும் இவ்வாறான திருட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகக் கூறினர்.

# கரைச்சி பிரதேசயின் சபை அமர்வில் மாவீரர்களிநகு விளக்கேந்றி அஞ்சலி!

கரைச்சி பிரதேச சபை அமர்வில் மாவீரர்களிற்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கரைச்சி பிரதேச சபையின் அமர்வு நேற்று (வெள்ளிக்கிழமை) காலை தவிசாளர் வேழமாலிகிதன் தலைமையில் ஆரம்பமானது.

இதன் போது, கனகபுரம் மற்றும் தேராவில் மாவீரர் துயிலும் இல்லங்களை கரைச்சி பிரதேச சபையின் ஆளுகையின் கீள் கொண்டுவந்து, மனிதவளம், இயந்திர வளங்களை அங்கு பயன்படுத்தல் மற்றும் மரக் கன்றுகளை வழங்கல் எனும் தீர்மானமும், பிரதேச சபை ஒதுக் கீட்டில் நலிந்த மாவீரர்களின் குடும்பங்களிற்கு உதவும் வகையில் ஒதுக்கீடுகளை ஒரு பெயரில் மேற்கொள்ளவும் தவி சாளரால் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

இந்த பிரேரணையை ஆதரித்து அனைத்துக் கட்சி பிரதிநிதிகளும் உரையாற்றியதுடன், அவர்களின் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக தவிசாளர் சபையில் அறிவித்தார்.

தொடர்ந்து, சபையில் மாவீரர்களுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாவீரர் நினைவு மண்டபத்தில் பருத்தித்துறையில் அஞ்சலி!



யாழ். பருத்தித்துறை மாவீரர் நினைவு மண்டபத்தில் மாவீரர்களுக்கான அஞ்சலி மற்றும் மாவீரர்களின் பெற்றோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் பருத்தித்துறை, நீதிமன்ற வீதியில் அமைக்கப்பட்ட மாவீ ரர் நினைவு மண்டபத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) மாலை 4.30 மணிக்கு இந்நிகழ்வு இடம்பெற்றது.

3 மாவீரர்களை மண் விடுதலைப் போராட்டத்துக்கு அர்ப்பணித்த தாய் ஒருவர் மாவீரரகளுக்கான பொதுச் சுடரை ஏற்றிவைத்து அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து கண்ணீர் மல்க, உணர்வுபூர்வமாக மாவீரர்களுக்கான அஞ்சலி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டு மரக்கன்றுகள், சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை, நினைவு மண்டபத்தை சூழ புலனாய்வாளர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் மாணவர்கள் மத்தியில் வீதி விபத்து குறித்து விழிப்புணர்வு!



நாட்டில் ஏற்படும் விபத்துக்களால் ஏற்படுகின்ற காயங்கள் காரணமாக மரண சம்பவங்கள் நிகழ்வதோடு, நிரந்தர அங்கவீனமும் ஏற்படுகிறது.

இந்த நிலையில் விபத்து தொடர்பாக மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் வீதி போக்குவரத்து பிரிவு பொலிஸார் மற்றும் பிராந்திய தொற்றா நோய்கள் தடுப்பு பிரிவினர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். கடந்த வியாழக்கிழமை மதியம் மன்னார் பொலிஸ் நிலைய வீதிப் போக்குவரத்து பிரிவினருடன் இணைந்து பிராந்திய தொற்றா நோய்கள் தடுப்பு பிரிவினரால் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் வீதிப் பாதுகாப்பு, விபத்து தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது வீதிப் போக்குவரத்து பிரிவு பொலிஸார் மற்றும் பிராந்திய தொற்றா நோய்கள் தடுப்பு பிரிவினர் ஆகியோர் இணைந்து ஏற்படும் வீதி விபத்துக்கள் தொடர்பாகவும்,விபத்துக்களில் இருந்து எம்மை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது உள்ளிட்ட பாதுகாப்பு விடையங்கள் பற்றியும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒருபுறம்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

-இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில்மொத்த இராணுவத்தினரது எண்ணிக்கையில் அதிகளவானோர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமர்த்தப்பட்டுள் ளார்கள்.

யுத்தம் முடிவடைந்த பின்னரும் வடக்குமற்றும்கிழக்குமாகாணங்களில் இராணுவத்தினரது செயற்பாடுகள் எல்லை கடந்து செல்கின்றன. காணி ஆக்கிரமிப்பு தொடர்ந்து இடம்பெறுகின்றன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண பேச்சுக்கு ஜனாதிபதி ஒருபுறம் அழைப்பு விடுத்து விட்டு, மறுபுறம் தமிழர்களின் காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமிக்க இடமளிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். இது மறைக்கப்பட முடியாத உண்மை.

அரசு இனவாதம், பௌத்த சித்தாந்தத்துடன் செயற்படுகின்றது. இவ்வாறான பின்னணியில் எவ்வாறு தீர்வு காண முடியும்?

விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் தற்போதும் இலக்கு வைக்கப்படுகிறார்கள். இதனால் அவர்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அரசு இனவாதத்தை விடுத்து செயற்படும் வரை ஒருபோதும் நாடு முன்னேற்றமடைய முடியாது

நாட்டு மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்யவில்லை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிரான செயற்பாடுகள் மாத்திரம் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

தனிப்பட்ட அரசியல் சித்தாந்தங்களைபின்பற்றும்உரிமைஅனைவருக்கும் உண்டு. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் அவர் தலைமையிலான அரசுக்கு நாட்டு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் இன்று வசந்த முதலிகே உள்ளிட்டோர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் தண்டிக்கப்பட்டுள்ளார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடுமையை தமிழர்கள் நன்கு அறிவார்கள்.இதன் காரணமாகவே பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுக்கின்றோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.

காலிமுகத்திடலில் தோற்றம் பெற்ற போராட்டம் வன்முறையற்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மே மாதம் பிரதமராகப் பதவியேற்ற போது காலி முகத்திடல் போராட்டம் பாதுகாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார். அப்போராட்டம் பயங்கரவாதம் என அவர் அப்போது குறிப்பிடவில்லை.மே மாதம் 9 ஆம் திகதி போராட்டக்களத்தின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் தற்போது மறைக்கப்பட்டுள்ளார்கள்.

ஆளும் தரப்பினரால் நாட்டு மக்களின் பொருளாதாரம், வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. நெருக்கடிக்குள்ளான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

ஜனநாயக போராட்டத்தை எவ்வாறு பயங்கரவாதப் போராட்டம் என்று குறிப்பிடுவது. ஆகவே, போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் பாதுகாப்பை எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து உறுதிப்படுத்த வேண்டும் -என்றார்.

## வீரமறவர்களை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் நடைபெறவுள்ளன. இதற்காகத் தமிழர் தாயகத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களும், புலம்பெயர் தேசங்களில் உள்ள மாதிரி மாவீரர் துயிலும் இல்லங்களும் தயார் நிலையில் உள்ளன.

தமிழ் மக்களின் விடிவுக்காகத் தங்களை ஆகுதியாக்கிய வீரமறவர்களை நவம்பர் 21ஆம் திகதி முதல் ஒரு வாரம் நினைவேந்தி நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் தமிழ் மக்களால் வருடாந்தம் முன்னெடுக்கப்படும்.

இந்த ஆண்டும் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், மாவீரர் நினைவேந்தல் வாரம் கடந்த 21ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமானது.

அதற்கமைய தமிழர் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் நாளாந்தம் மாவீரர் அஞ்சலி நிகழ்வும், மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்று வந்தன.

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் அரச படைகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் துயிலும் இல்லங்கள் சிரமதானம்மூலம்துப்புரவுசெய்யப்பட்டு மாவீரர் இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வுக்கானஅனைத்துஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த நாளை மாலை அனைவரையும் அணி திரண்டு வருமாறு மாவீரர் துயிலும் இல்லங்களின் பணிக்குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

மாவீரர் துயிலும் இல்லங்களில் நாளை மாலை 6.05 மணிக்குப் பொதுச்சுடர், நினைவுச்சுடர்கள் ஏற்றப்பட்டு வணக்கம் செலுத்தும் நிகழ்வுகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வேம்படி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியோரில் 100 வீதமானோரும் தேர்ச்சி அடைந்துள்ள பாடசாலைகளில்வேம்படிஉயர்தரப்பாடசாலையும் ஒன்றாக விளங்குகின்றது.

இதேநேரம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 255 மாணவர்களில் 62 பேர் 9 பாடங்களிலும், 46 பேர் 8 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்று சாதனை புரிந்துள்ளனர்.

இந்துக் கல்லூரியில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 99 வீதமானோர் தேர்ச்சியடைந்துள்ளனர்.

## மட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பா. அரியநேத்திரன் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

மாவீரர் துயிலும் இல்லங்களில் நாளை மாலை 6.05 மணிக்குப் பொதுச்சுடர், நினைவுச்சுடர்கள் ஏற்றப்பட்டு வணக்கம் செலுத்தும் நிகழ்வுகள் இடம்பெறும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடி முன்மாரி துயிலும் இல்லம், தாண்டியடி துயிலும் இல்லம், தரவை துயிலும் இல்லம், வாகரை கண்டலடி துயிலும் இல்லம் என நான்கு துயிலும் இல்லங்கள் உள்ளன.

இந்த நான்கு துயிலும் இல்லங்களில் தாண்டியடி துயிலும் இல்லத்தில் இராணுவ முகாம் உள்ளதால் தாண்டியடி சந்தியில் உள்ள பிரத்தியேக இடத்திலும், ஏனைய மூன்று துயிலும் இல்லங்களில் அதே துயிலும் இல்லங்களிலும் வணக்க நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெறவுள்ளன.

விரும்பிய நான்கு இடங்களில் அனைவரும் அவரவர் வசதிக்கு அமைவாக கலந்துகொண்டு உயிர்நீத்த எமது உறவுகளுக்கு மனதார தீபங்களை ஏற்றி அஞ்சலி வணக்கம் செய்யலாம்.

அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லத்துக்கு அம்பாறை மாவட்ட எமது மக்கள் கலந்துகொள்ளலாம்.

நாளை கட்டாயம் விரும்பிய அனைவரும் மாலை 4 மணிக்கு முன்னதாக குறிப்பிட்ட துயிலும் இல்லங்களுக்கு சமூகம் தருவது நல்லது – என்றார்.

## மாவீரர் நிகழ்வை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதில் இருந்து தவிர்க்குமாறும், அதிலிருந்து உடனடியாக விலகி நிற்குமாறும் திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

பொத்துவில் பிரதேச சபையின் உபதவிசாளர் பெருமாள் பார்த்தீபனிடம் இந்த அறிவுறுத்தல் கடிதம் இன்று கையளிக்கப்பட்டுள்ளது.

நாளை 27ஆம் திகதி கஞ்சிகுடிச்சாறு புலிகள் இயக்கத்தின் மயான பூமியில் புதைக்கப்பட்டுள்ள மரணித்த புலிகளை நினைவுகூரவுள்ள மாவீரர் தின நிகழ்வுகளை நடத்த வேண்டாம்.

மேலும், அந்த மயான பூமியில் புதைக்கப்பட்டுள்ள மரணித்த புலிகள் இயக்க உறுப்பினர்களின் தாய், தந்தை மற்றும் உறவினர்களால் மீண்டும் புலிகள் இயக்கத்தை முச்சி பெறும் வகையில் இறந்த உறுப்பினர்களை நினைவுகூரும் வகையில் நடத்த இருக்கின்ற மாவீரர் தின நிகழ்வுகளைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

2011.08. 29ஆம் திகதி இலங்கையின் ஜனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1721(02) கீழ் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக தடை செய்யப்பட்டுள்ளதுடன் புலிகள் இயக்கம் தொடர்பான எந்தவித செயற்பாடுகளோ, நிகழ்வுகளோ நடத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே, அதை மீறி இவ்வாறான நிகழ்வுகளில் கலந்துகொண்டால் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்க நேரிடும் என்பதைத் தெரிவிக்கின்றேன் – என்று திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எழுத்து மூலம் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

பிரதி அக்கரைப்பற்று பிரதிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்)

076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.11.2022 இல் வெளியிடப்பெற்றது.